# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 106/பேரூ/2023**
**நாள் : 03.07.2023**

திருமதி அமுதினி ஜெயபிரகாஷ்,
சென்னை மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பாகோடு பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம் .... எதிர்மனுதாரர்

சென்னை ஜனப்பன் சத்திரம், கணேஷ் நகர், NHC பில்டிங், என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் என்பவரது 21.04.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.04.2023 அன்று பெறப்பட்டு, 106/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை ஜனப்பன் சத்திரம், கணேஷ் நகர், NHC பில்டிங் என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

" In the survey number 430/3A1A, one of the share allotted in final decree order dated 9/3/2013 and commission plan in OS 484 of 1961 is Plot No.38 part: which comprise 11.690 cents allotted to my father Late Thyagi Mr. Rajayyan Robin (Ellai Kavalar Pensioner) and 10.284 cents allotted to Mr. Rengasamy, which he sold to my mother in the year 1983. So totally 22.514 cents in Plot No.38 belong to my family. The same is allotted to my father in the final decree dated 16.7.2009 and commission plan in OS 136/2002 as 1/3rd share of his parent's titles declared through sale deeds, gift deeds and possessions on the merits of titles. EP for both the suits are pending. Its pertinent to mention that, a partition suit does not make a plaintiff or defendant to loose unless plaintiff or defendant does not prove a proper title.

My parents have 4 daughters including me as the youngest. Two of my elder sisters are mentally retarded: Nalini Robin – 47 yrs old and Shalini Robin – 45 yrs old. We, other 2 daughters are married and living in Chennai. My father passed away on 29.6.2019, leaving these properties behind for the well being of my mentally retarded sisters, for their routine life care and medical care appointing me as their guardian. My elderly mother and my disabled sisters are in my care as of now. In the mean time Ajith Selvins started to construct a basement for a new building in our property during January 2021. I filed a complaint in Marthandam PS and sent a legal notice to the Executive officer. Pacode Town Panchayat regarding this, then and there. Subsequently we came to know that the settlement deeds, dated 5.8.2020 and patta subdivisions, dated 18.1.2021 were done fraudulently by Ajith Selvins and his family, when the suit decree and a sale deed were in favour of us.

When the building was in basement stage, we represented through our counsel on 30.1.21 to the Executive Officer Pacode town Panchayat starting that this approval is a collusive fraudulence with Ajith has strong grounds. The EO's contention is that he has given approval in the subdivided Re Survey No.430/3A1A2 and our land is in 430/3A1A. The Resurvey number 430/3A1A bear a Kootupatta in which the subdivisions and the building was given approval by VO and EO respectively in the part of property for which my parents are the absolute owners.

I represented the matter to the Sub Collector, Padmanabhapuram, praying to cancel the subdivisions which was later cancelled on 9/4/2022 after detailed enquiry and reports from the Tahsildhar stating that upon perusal of the basic documents-Final decree and Judgement in OS 484/61 submitted during application of subdivision, 11.690 cents in the above said property is actually allotted to petitioners father Mr. Rajayyan Robin and the defendant's claim petition in the same suit is dismissed and has no appeal and that the suit filed by the defendents for declaration of their title is still pending.

I again applied for cancellation of building plan approval to the EO after the cancellation of subdivisions. But again he replied that, he can not cancel the building plan approval as the civil suit is pending. The petitioner has therefore requested this forum to enquire into this and take appropriate action against the erring official i.e. the Executive Officer of Pacode Town Panchayat.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பாக்கோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) பாக்கோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 15.05.2023 நாளிட்ட அறிக்கையில்

"கன்னியாகுமரி மாவட்டம், பாக்கோடு முதல்நிலை பேரூராட்சியில் திரு.எஸ்.பி. அஜித் செல்வின்ஸ், உழக்கச்சான்விளை மேல்புறம், பாகோடு அஞ்சல் என்பவரால் பாகோடு 'அ' கிராமம் புல எண்/3எ1எ3–இல் புதியதாக குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு 02.03.2021 அன்று கட்ட வரைபடம் பத்திரப்பதிவு துறை (பாகப்பத்திரம்) ஆவணம் எண்.1673/2020, நாள் 05.08.2020 பட்டா எண். 10653, திரு. அஜித் செல்வின்ஸ் பெயரில் பாகோடு கிராமம் புல எண் 430/3எ1எ3க்கு

19.1.2001 நாளிட்ட நிலவரி ரசீதின் நகல் ஆகியவை இணைக்கப்பட்டு கட்டட உரிமம் பெறுவதற்கு கட்டட அனுமதி விண்ணப்பம் பேரூராட்சியில் சமர்ப்பித்தார். விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி கட்டடத்திற்கு கட்டட அனுமதி வழங்குவதற்கு செயல் அலுவலராகிய என்னால் 02.03.2021 அன்று நேரடி தலப்பார்வை மேற்கொள்ளப்பட்டு கட்டட அனுமதிக்கான தொகைகள் அரசுக்கு செலுத்தப்பட்டு பாக்கோடு பேரூராட்சி கட்டட வரைபட அனுமதி எண்,127/2020–2021, நாள் 12.03.2021–இன்படி குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

கட்டட அனுமதி வழங்கப்பட்டு குடியிருப்பு கட்டடம் கட்டப்பட்ட பின்பு திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் என்பவர் 30.08.2021 இல் பாகோடு அ கிராமம் புல எண் 430/3A1A-இல் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவினை நீக்கம்செய்ய கோரி பத்மனாபபுரம் சார் ஆட்சியர் அவர்களுக்கு மனு அளித்துள்ளார். அதன்படி பத்மனாபபுரம் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் மூ.மு.ஆ.3/5234/2021 நாள் 09.04.2022 இன்படி பாகோடு அ கிராமம் புதிய புல எண்430/3A1A-இன்உட்பிரிவுகளான430/3A1A1-430/3A1A2-430/3A1A3-430/3A1A4-430/3A1A5 ஆகியவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் நிலத்தின் உரிமை தொடர்பாக அசல் வழக்கு 161/2013 தாக்கல் செய்து நாளது தேதிவரை நிலுவையில் உள்ளது. மேற்படி பத்மனாபபுரம் சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் நிலுவையில் உள்ள நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் எதிர்மனுதாரர்கள் ( திரு. சஜித்செல்வின்ஸ் மற்றும் சதீஷ்) பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நிலம் தொடர்பாக நடைபெற்றுவரும் அசல் வழக்கு எண். 161/2013, 1749/2021, 1750/2021 EP.10/2016, OS.No.484/1961 ஆகிய வழக்குகள் நிலுவையில் உள்ளதால் திரு. அஜித்செல்வின்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட கட்டட உரிமம் (உரிமம் எண் 127/2020–2021, நாள் 12.03.2021) ரத்து செய்யப்படவில்லை.

பாகோடு பேரூராட்சியிலிருந்து வழங்கப்பட்ட கட்டட அனுமதி ஆவணங்கள் மற்றும் வரைபடத்தின் அடிப்படையில் மட்டுமே கட்டட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்தவிதமான முறைகேடுகள் நடைபெறவில்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 15.5.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5)15.05.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தின் 15.5.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"கன்னியாகுமரி மாவட்டம், பாகோடு பேரூராட்சிக்குட்பட்ட பாகோடு கிராம புல எண்.430/3A1Aல் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்காக திரு S.P.அஜித் செல்வின்ஸ் என்பவரால் கட்டட வரைபடம் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டது. பாகப் பத்திர ஆவணம், நில வரி இரசீதின் நகல் ஆகியவற்றுடன் 02.03.2021 அன்று பெறப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில், நேரடி தல ஆய்வு செய்யப்பட்டு 12.03.2021 அன்று குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு ஆவணங்களின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டட அனுமதி வழங்கப்பட்டு குடியிருப்பு கட்டடம் கட்டப்பட்ட பின்னர் மனுதாரர் திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் மேற்கண்ட புல எண்.430/3A1Aல் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவினை ரத்து செய்ய சார் ஆட்சியரிடம் மனு அளித்திருந்ததைத்

தொடர்ந்து 9.4.2022 அன்று சார் ஆட்சியரால் பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது. சார் ஆட்சியரின் ரத்து செய்த உத்தரவில் நிலுவையில் உள்ள நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் என்பவருக்கு அறிவுறுத்தியதின் அடிப்படையில் கட்டட அனுமதி ரத்து செய்வது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் தற்போது அங்கு கட்டடம் கட்டும் பணி ஏதும் நடைபெறவில்லை. மேலும் மேற்கண்ட திரு S.P.அஜித் செல்வின்ஸ் என்பவரால் கட்டட அனுமதிக்கான விண்ணப்பம் பேரூராட்சியால் பெறப்பட்டு, 12.3.2021 அன்று ஒப்புதல் வழங்கிய பின்னர்தான் இந்நேர்வு தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தை மனுதாரர் பேரூராட்சிக்கு தெரிவித்துள்ளார் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பான எனது 15.5.2023 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து, இது தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தான் வெளியூரில் உள்ளதாகவும், எனவே தன்னால் முறைமன்ற நடுவத்தில் 15.5.2023 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள இயலாது என தெரிவித்து தன்னை விசாரணை செய்திட பிறிதொரு நாளை வழங்கிட கேட்டுக் கொண்டதின் பேரில் 07.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

கன்னியாகுமரி மாவட்டம் பாகோடு பேரூராட்சி சர்வே எண் 430/3A1A –ல் எனது தந்தைக்கு சொந்தமான 11 செண்ட் இடமும், எனது தயாருக்கு சொந்தமான 11 செண்ட் இடமும் மொத்தம் 22 செண்ட் காலியிடம் உள்ளது. மேற்கண்ட இடத்திற்கு அருகில் வசித்து வரும் திரு செல்வதாஸ் என்பவரின் மகன் அஜித் என்பவர் மேற்கண்ட எங்கள் இடத்திற்கு போலியாக ஆவணங்களை தயார் செய்து, அவற்றை பாகோடு பேரூராட்சியில் சமர்ப்பித்து கட்டட வரைபட ஒப்புதலை பெற்றுள்ளார். மேற்கண்ட எங்களது இடத்திற்கு சொந்தமான இடத்திற்கு போலியான ஆவணங்களை தயார் செய்து திரு அஜித் செல்வன் என்பவரால் உட்பிரிவு செய்யப்பட்டதை, பத்மனாபபுரம் சார் ஆட்சியர் தனது செயல்முறை ஆணை நாள் 09.04.2022 ல் ரத்து செய்துள்ள நிலையில், திரு அஜித் செல்வின்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட கட்டட வரைபட ஒப்புதலை ரத்து செய்ய வேண்டி எங்களால் மனு அளிக்கப்பட்டது. மேலும் தொலைபேசியின் மூலமும் செயல் அலுவலரிடம் மேற்கண்ட வரைபட ஒப்புதலை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொண்டோம். ஆனால், எங்களது கோரிக்கையை ஏற்காத நிலையில், என்னால் இம்முறை மன்றத்தில் 21.4.2023 அன்று முறையீட்டு மனுவினை அளித்த பின்னர், மேற்கண்ட கட்டட வரைபட நகலை பாகோடு செயல் அலுவலர் 16.5.2023 அன்று ரத்து செய்துள்ளார்.

திரு. அஜித் செல்வின்ஸ் என்பவர் போலியான ஆவணங்களை சமர்ப்பித்து எங்களது இடத்தில் வீட்டை கட்டி வரும் நிலையில், எங்களால் கடந்த 4 ஆண்டு காலமாக கட்டட வரைபட அனுமதி ரத்து செய்திட மனுக்கள் அளித்த நிலையில், தற்போதுதான் மேற்கண்ட கட்டட வரைபட அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, கால தாமதமாக கட்டட வரைபட அனுமதியை ரத்து செய்த சம்பந்தப்பட்ட பேரூராட்சி

அலுவர்கள் அனைவர் மீதும் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இம்முறைமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட 21.04.2023 நாளிட்ட மனுவில் உள்ள விவரங்களையே எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும் படியும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பாகோடு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் செயல் அலுவலர் மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியோரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் (மற்றும்) விதிகளில் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:-

பிரிவு 7 " The Ombudsman shall perform all or any of the following functions namely:-

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இம்முறைமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்கையில் புகார் மனுதாரர் சார்பாக 30.1.2021 நாளிட்டு மனுதாரரின் வழக்கறிஞரால் பேரூராட்சி செயல் அலுவலருக்கு பதிவுத்தபால் ஒப்புகையுடன் அளிக்கப்பட்ட வழக்கறிவிப்பு எண் 3/2021–ல் தனது கட்சிக்காரரின் தந்தை தங்கப்பன் என்ற திரு. வே. ராஜய்யன் ராபின் என்பவர் பொருளில் காணும் சொத்து உட்பட பாகப்பிரிவினை கோரி மொத்தம் 20 அட்டவணை சொத்துக்களை சேர்த்து தீர்ப்பாணை நிறைவேற்றுகை மனு எண் 35/2013 வழக்கை தாக்கல் செய்து 01.09.2005ல் அவருக்குரிய பங்குகளை விளம்புகை செய்தது. அதன் அடிப்படையில் 15.07.2009ல் இறுதிநிலைத் தீர்ப்பாணையும் அவர் பெயரில் வழங்கப்பட்டன. இதற்கிடையில் என் கட்சிக்காரர் தங்கப்பன் என்ற வே. ராஜய்யன் ராபின் கடந்த 29.05.2019ல் காலமானார். அதன்பின் அவரது வாரிசுகளாக அவரது மனைவி எஸ்தர் வில்லி மற்றும் அவரது நான்கு மக்களான அமுதினி ஜெயப்பிரகாஷ், நளினி ராபின், ஷாலினி ராபின் ஆகியோரை மேற்படி வழக்கு எண் 35/2013–ல் கூடுதல் தரப்பினர்களாகச் சேர்க்க மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றும்

இந்நிலையில் மேற்படி சொத்துக்கு கிழக்கு பக்கமாக வசித்துவரும் செல்வதாஸ் என்பவரின் புதல்வன் திரு. அஜித் செல்வின்ஸ் என்பவர் எனது கட்சிக்காரரின் 11.690 சென்ட் சொத்தில் தெற்குப் பகுதியை ஆக்கிரமித்து எவ்வித அனுமதியும் பெறாமல் அதில் அடித்தளம் அமைத்து கட்டிடம் கட்டி வருவதாகவும் கட்டடம் கட்டுவதற்கு தங்களிடம் ஏதாவது அனுமதி பெற்றிருந்தாலோ, வருவாய் ஆவணங்களில் பட்டா, நிலவரி ஆகியவற்றை ஏற்படுத்தியிருந்தாலோ அவற்றை உடனடியாக ரத்து செய்து மேற்படி கட்டுமானப் பணிகளை நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை எடுத்து அறிவிக்க வேண்டுமென்றும் தவறினால் என்கட்சிக்காரர் தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்வதுடன், அதற்கான இழப்பீட்டையும் வசூலிக்க ஏதுவாகும் என

குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டு பாகோடு பேரூராட்சி சார்பாக ஒப்புகையும் பெறப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு திரு அஜித் செல்வின்ஸ் மனு அளித்ததைத் தொடர்ந்து எதிர்மனுதாரரால் அதாவது பாகோடு செயல் அலுவலரால் 2.3.2021 அன்று விண்ணப்பம் பெறப்பட்டு, 2.3.2021 அன்றே களத்தணிக்கை செய்யப்பட்டு, 12.3.2021 அன்றே கட்டட அனுமதி ஆணை அவசர அவசரமாக வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வழக்கறிஞர் அவர்களால் எச்சரிக்கை அறிவிப்பு 30.1.2021 அன்றே அளிக்கப்பட்டும் அதைக் கருத்தில் கொள்ளாமல், ஏற்கனவே கட்டட அனுமதி பெறாமல் அடித்தளம் அமைத்து கட்டிடம் கட்டி வருவதாக மனுதாரரின் வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்ட நிலையில் மேற்படி இடத்தை 2.3.2021 அன்றே, அதாவது கட்டட அனுமதிகோரி விண்ணப்பம் அளித்த அன்றே களத்தணிக்கை செய்யப்பட்டு, 12.3.2021 அன்று கட்டட அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பது வழக்கறிஞரின் முன்னறிவிப்பை ஏற்காமல் விதிமுறைகளை பின்பற்றாமல் கட்டடம் கட்ட அனுமதி வழங்கிய செயல் அலுவலரின் நடவடிக்கை உள்நோக்கம் உள்ளது என்றே இம்முறைமன்றம் கருதுகிறது.

இதனைத் தொடர்ந்து தமது 30.8.2021 நாளிட்ட மனுவில் மனுதாரின் தந்தை 29.6.2019–ல் காலமான நிலையில் மேற்படி சொத்தில் தமது குடும்ப உறுப்பினர்களான தமது தாய், சகோதரிகள் மற்றும் தன்னையும் சேர்க்கப்பட்டு வழக்கு எண். O.S.161/2013 நிலுவையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி முறைகேடாக கட்டட அனுமதிபெற்று கட்டடம் கட்டிவருவதை தடுத்து நிறுத்துமாறு பாகோடு செயல் அலுவலருக்கு மனு அளித்துள்ளார் கட்டட அனுமதியை ரத்து செய்யக்கோரி பாகோடு செயல் அலுவலருக்கு அளிக்கப்பட்ட மனுதாரரின் பல்வேறு கோரிக்கைகள் கண்டு கொள்ளப்படாததால் புகார் மனுதாரரால் **30.8.2021** அன்று பத்மனாபபுரம் சார் ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. விசாரணையின் முடிவில் பத்மனாபபுரம் சார் ஆட்சியரால் வழங்கப்பட்ட **9.4.2022** நாளிட்ட செயல்முறை ஆணை எண். மூ.மு. ஆ3/5234/2021–ல் " ஆவணங்கள் மற்றும் விசாரணையின்படி எதிர்மனுதாரர்கள் புல எண் **430/3A1A**–ல் உட்பட்ட நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது மேற்படி புல எண்ணில் உட்பிரிவு செய்ய மனு செய்ததன்பேரில் **430/3A1A1, 3A1A2, 3A1A3, 3A1A4, 3A1A5** ஆகிய உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது என்றும் எனவே பாகோடு 'அ ' கிராமம், புல எண். **430/3A1A**-ல் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவுகள் **430/3A1A1,3A1A2,3A1A3, 3A1A4, 3A1A5** ஆகியவற்றை வருவாய் (நிலை) ஆணை எண்31 (8)–ன்படி ரத்து செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

தற்போது மனுதாரால் இம்முறைமன்றத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு எண்.106/பேரூ/2023 தொடர்பாக 15.05.2023 அன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணையில் ஆஜரான பாகோடு பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் " 9.4.2022 நாளிட்ட சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்ட உத்தரவில் நிலுவையிலுள்ள நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு திருமதி அமுதினி ஜெயப்பிரகாஷ் என்பவருக்கு அறிவுறுத்தியதின் அடிப்படையில் கட்டட அனுமதி ரத்து செய்வது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை யென்றும், 12.3.2021 அன்று கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்த பின்னர்தான் இந்நேர்வு தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தை மனுதாரர் பேரூராட்சிக்கு தெரிவித்துள்ளாரென்றும் குறிப்பிட்டுள்ளார்.

பத்மனாபபுரம், சார் ஆட்சியரால் வழங்கப்பட்ட 9.4.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் மனுதாரர் திருமதி அமுதினி ஜெயபிரகாஷ் என்றும் எதிர் மனுதாரர் திரு S.P. அஜித்செல்வின் என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆணையில் பாகோடு 'அ' கிராமம் புல எண்

430/3A1Aல் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவுகள் 430/3A1A1, 3A1A2, 3A1A3, 3A1A4, 3A1A5 ஆகியவை வருவாய் நிலை ஆணை எண் 31(8)–ன்படி ரத்து செய்யப்படுகிறதென்றும், நிலுவையிலுள்ள நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு எதிர்மனுதாரர்களுக்கு (அதாவது திரு. S.P. அஜித்செல்வின் மற்றும் சிலர்) அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடப்படுகிறது. இதிலிருந்து சார் ஆட்சியரின் ஆணையின் கருத்துக்களை பாக்கோரை செயல் அலுவலர் வேண்டுமென்றே புரிந்துகொள்ளாத விதம் கண்டனத்துக்குரியது.

பின்னர் 15.05.2023 அன்று இம்முறைமன்றத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு அடிப்படையில் 16.05.2023 நாளிட்ட கடிதத்தில் நடவடிக்கைகள் எண் 307/2021/அ1ன்படி மேற்படி திரு.S.P. அஜித்செல்வின்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட குடியிருப்புக் கட்டத்திற்கான கட்டட அனுமதியை ரத்து செய்து பாகோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர்ஆணை பிறப்பித்துள்ளார்.

<u>மனுதாரர் திருமதி அமுதினி ஜெயப்பிரகாஷ் என்பவரின் வழக்கறிஞர் தமது 30.1.2021 நாளிட்ட செயல் அலுவலருக்கு முகவரியிட்ட அறிவிப்பில் மேற்படி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், கட்டடம் கட்ட அனுமதி பெறும் முன்பே கட்டிடம் கட்டுவதற்கான அடித்தளம் முடித்து கட்டடம் கட்டப்பட்டுவந்த நிலையில், திரு. S.P.அஜித்செல்வின்ஸ் என்பவரால் கட்டட வரைபட அனுமதி கோரி 2.3.2021–ல் சமர்ப்பித்த மனுவின்மீது உடனடி நடவடிக்கை எடுத்து, 2.3.2021 அன்றே கள ஆய்வு செய்து 12.3.2021 அன்று கட்டடவரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் செயல் அலுவலரின் ஆர்வமும் ஒருதலைப்பட்சமான போக்கும் தெளிவாகிறது. மேலும் பத்மனாபபுரம் சார் ஆட்சியரின் 9.4.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில் பாகோடு 'அ' கிராம புல எண் 430/3A1A–ல் மேற்கொள்ளப்பட்ட உட்பிரிவுகளை ரத்து செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி மனுதாரால் திரு. S.P. அஜித்செல்வின்ஸ் என்பவருக்கு கட்டடம் கட்ட வழங்கப்பட்ட அனுமதியை ரத்து செய்யும்படி எழுத்து மூலம் கோரிக்கைவிடுத்தும் சுமார் ஓராண்டுக்குமேல் தாமதப்படுத்தி புகார் மனுதாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தி பின்னர் 16.05.2023 நாளிட்ட தமது செயல்முறைகளின்படி ரத்து செய்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது</u> மற்றும் அரசுப்பணியில் அவரது மெத்தனப்போக்கையும் காட்டுகிறது. எனவே பாகோடு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடைமுறையிலுள்ள விதிகளின்படி துறைரீதியாக ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமபாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்றம் நடுவம் முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

The biased, partisan and wooden conduct of the Executive Officer Town Panchayat is condemned by this Forum. Such perverse and adament attitude as a Government servant without following the principles of strict neutrality, objectivity and dispassionate dealing with an issue like this is extremely reprehensible on the part of the Executive Officer who had not cared to appreciate the petitioner's repeated pleas. Even after the orders of Sub Collector of the Revenue Division the Executive officer did not correct his position for more than 1 year. The Director of Town Panchayats is directed to launch strict disciplinary action against the Executive Officer in order to create a moral fear in the minds of the other

Executive Officers and avert unnecessary and unscrupulous acts of this kind that should not arise in future.

It is regrettable that the Assistant Director of Town Panchayat of Kanyakumari District concerned had not taken cognizance of such aberrations and abuse of powers at the level of this Town Panchayat Executive Officer during inspections which exposes the Assistant Director's dereliction of duties and lack of supervisory control besides motivated silence over violation of this kind.

2023–ஆம் ஆண்டு, ஜுலை 03 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி அமுதினி ஜெயபிரகாஷ்,
NHC பில்டிங், கணேஷ் நகர்,
ஜனப்பன் சத்திரம், சென்னை–67

2) செயல் அலுவலர்,
பாகோடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிபிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை –600028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.